17th January 1964]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The number of persons registered in the Special Employment Office for the Physically Handicapped during the period from April 1952 to September 1963 is 429.

(b) Blind—158.

Deaf—11.

Deafmute—81.

Orthopaedics—179.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த மாதிரி அங்கஹீனமானவர்களுக்கு, ஜில்லா வேலை தேடிக் கொடுக்கும் ஸ்தாபனம் முன் பாத்தியதை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறிப்பிட்ட வேலைக்கு அங்கஹீனமானவர்கள் தகுதியுடையவர்களாக இருந்து வேலையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தால் அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

திருமதி டி. என். அனந்தநாயகி : இந்த மாதிரி அங்கஹீனமானவர்களை அரசாங்க நிறுவனங்களில்—கவர்ன்மெண்ட் பிரஸ், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் டிப்பார்ட்மெண்ட் ஆகியவற்றில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஜி. ஓ. பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா ? இல்லை என்றால் இனிமேலாவது அப்படி ஒரு ஜி. ஓ. பிறப்பிக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : காலியாக இருக்கும் வேலைக்கு அவர்கள் தகுதியுள்ளவர்களாக இருந்தால் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : உடல் ஊனம் உற்றவர்களுக்காகத் தனியாக அமைக்கப்பட்டிருக்கும் வேலைதேடித் தரும் ஸ்தாபனம் எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்படவில்லை. அதை ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்க சர்க்கார் முன் வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்த வரையில் எல்லா மாவட்டங்களிலும் இந்த ஸ்தாபனம் பணி புரிந்து வருகிறது.

*** 9 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-63-ல் அரசாங்க அச்சகம், நூல் நிலையம் ஆகியவற்றில் உடல் ஊனமுற்றவர்கள் எத்தனைபேருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The number of physically handicapped persons placed in employment either in the Government Presses or in the Government Library is nil.

திரு. து. ப. அழகமுத்து : அரசாங்க அச்சகம், நூல் நிலையங்களில் உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை தரவேண்டுமென்று மதிப்பீட்டுக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. அதை அமுலாக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் பார்க்கக்கூடிய வேலை இருந்து, அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளுவதாக இருந்தால் வேலை கொடுக்கப்படும். குறிப்பிட்ட வேலைக்கு அவர்கள் தகுதி உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

திரு. ம. கமலநாதன் : 1962-63-ல் இப்படி வேலை தேடித் தரும் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் எத்தனை பேர் ? அவர்களில் எத்தனை பேருக்கு என்ன வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும்.

* 10 கேள்வி.—**திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குருடர் முதலான உறுப்பிழந்தோருக்கு வாழ்வு தரும் வகையில் மாநில அரசு 1962-ல் செலவழித்த தொகை என்ன ?

(இ) மத்திய அரசிடமிருந்து இதற்காக உதவி ஏதேனும் கிடைத்ததா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A sum of Rs. 3,31,848 was spent on the education of the handicapped during 1962–63 and a sum of Rs. 7,951·65 on the Special Employment Office for the Physically Handicapped.

(*b*) No financial aid was received from the Government of India towards expenditure on the education of the handicapped. The entire expenditure incurred on the Special Employment Office was, however, reimbursed by the Government of India.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : உறுப்பிழந்தோர் பலர் தெருவிலே பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது வேறு விஷயம். அதற்குத் தனியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கொதிகலன் தொழிற்சாலை (திருச்சிராப்பள்ளி)

* 13 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி உயர்அழுத்தக் கொதிகலன் திட்டத்தின் ஆரம்ப வேலைகளைச் செய்யும் பணியை நமது மாநில அரசாங்கத்திடம் மத்திய அரசாங்கம் ஒப்படைத்துள்ளதா ?

(இ) ஆரம்ப வேலைகளுக்கு நமது மாநில சர்க்கார் இதுவரை எவ்வளவு தொகை எவை எவற்றிற்காகச் செலவிட்டிருக்கிறார்கள் ?